www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அரையாண்டுப் பொதுத் தேர்வு 2024 - 2025

**காலம் : 2.30 மணி** **வகுப்பு 8** **தமிழ்** **மதிப்பெண்கள் : 100**

## பகுதி I பிரிவு 1

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **11 X 1 = 11**

1. இயற்கையைப் போற்றுதல் தமிழர் ............... ,
அ) மரபு ஆ) பொழுது இ) வரவு ஈ) தகவு
2. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ............... ,
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை ஈ) நுண்கலை
3. இடம் + எங்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............... ,
அ) இடவெங்கும் ஆ) இடம்எங்கும் இ) இடமெங்கும் ஈ) இடமங்கும்
4. கலிங்க வீரர்களிடையே தோன்றிய உணர்வு ............... ,
அ) வீரம் ஆ) அச்சம் இ) நாணம் ஈ) மகிழ்ச்சி
5. செஞ்சொல் வள்ளைப்பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ............... ,
அ) கடல் ஆ) ஓடை இ) குளம் ஈ) கிணறு
6. ஆன்பொருநை என்று அழைக்கப்படும் ஆறு ............... ,
அ) அமராவதி ஆ) காவிரி இ) பவானி ஈ) நொய்யல்
7. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற இடம் ............... ,
அ) திருச்சி ஆ) மதுரை இ) சென்னை ஈ) கோவை
8. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் எது ? ............... ,
அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த
9. தோட்டத்தில் தம்பி ஊன்றிய ............... எல்லாம் முளைத்தன,
அ) சத்துகள் ஆ) முத்துகள் இ) பித்துகள் ஈ) வித்துகள்
10. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்து வைத்தவை ............... ,
அ) கல்வெட்டுகள் ஆ) செப்பேடுகள் இ) பனையோலைகள் ஈ) மண்பாண்டங்கள்
11. சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபு மறைந்து வருவது ............... ,
அ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

## பிரிவு - 2

**4 X 1 = 4**

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.**

நிலம் தீ நீர்வளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்
அ) பெரியபுராணம் ஆ) தொல்காப்பியம் இ) கலித்தொகை ஈ) இராவண காவியம்
13. வளி என்பதன் பொருள்
அ) மரம் ஆ) காற்று இ) உடல் ஈ) உறவினர்
14. நிலம், தீ, நீர், வளி, விசும்பு ஆகிய ஐந்தும் ,,,,,,,,,,, என்ற தொகைச் சொல்லால் குறிக்கப் பெறும்.
அ) ஐம்புலன் ஆ) ஐம்பொறி இ) ஐந்திறம் ஈ) ஐம்பூதம்
15. இப்பாடலை இயற்றியவர் யார் ?
அ) ஔவையார் ஆ) தொல்காப்பியர் இ) மருதனார் ஈ) குடபுலவியனார்

## பகுதி II பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.** **4 X 2 = 8**

(21 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும் )

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் உ, ஊ
ஆ) உலகம் ஐம்பூதங்களால் ஆனது
17. 'புலித்தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது ?
18. சோழ வீரர்களைக் கண்டு கலிங்கர் எவ்வாறு நடுங்கினர் ?
19. கொங்கு நாட்டில் பாயும் ஆறுகள் யாவை ?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

20. பகத்சிங் கண்ட கனவு யாது ?
21. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக ?

**பிரிவு - 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** **5 x 2 = 10**

22. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன ?
23. எச்சம் என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?
24. சந்திப்பிழை என்றால் என்ன ?
25. சரியான மரபு சொல்லால் நிரப்புக.
    அ) தண்ணீர் ............ ( பருக / குடி )
    ஆ) சுவர் ............ ( கட்டு / எழுப்பு )
26. கலைச்சொல் தருக.
    அ) Thread
    அ) Tax
27. தொடர்களை மாற்றுக.
    அ) காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக.)
    ஆ) அதிகாலையில் துயில் எழுவது நல்லது. ( விழைவுத் தொடராக மாற்றுக. )
28. எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக.
    அ) உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6
    ஆ) உலக ஈரநில நாள் பிப்ரவரி 2

**பகுதி III பிரிவு - 1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 x 3 = 6**

29. மூங்கிலால் செய்யப்படும் பொருட்கள் குறித்து எழுதுக ?
30. தமிழ்வழிக்கல்வி பற்றி திரு.வி.க கூறுவனவற்றை எழுதுக ?
31. **பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**
    மாங்கனி நகரம் என்னும் சிறப்புப் பெயர் கொண்டது சேலம், இம்மாவட்டத்தில் நெல், பருப்பு வகைகள், பருத்தி, கரும்பு, மாம்பழம், காப்பி பாக்கு ஆகியன பயிரிடப்படுகின்றன. இந்தியாவிலேயே இம்மாவட்டத்தில் தான் ஜவ்வரிசி அதிக அளவு உற்பத்தி செய்யப்படுகின்றன, தமிழ்நாட்டில் கைத்தறி நெசவு அதிகமாக உள்ள மாவட்டம் இதுவே,
    அ) சேலம் நகரின் சிறப்பு பெயர் என்ன ?
    ஆ) சேலம் மாவட்டத்தில் பயிரிடப்படும் பயிர்கள் யாவை ?
    இ) இந்தியாவிலே அதிக அளவு இம்மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள் எது ?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 x 3 = 6**

(34 - வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)

32. கொங்கு மண்டலச் சதகம் கூறும் கொங்கு மண்டலத்தின் எல்லைகள் யாவை ?
33. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை ?
34. " உடலின் " எனத் தொடங்கும் வருமுன் காப்போம் பாடலை எழுதுக.
    (அல்லது )
    " ஆற்றுதல் " - எனத் தொடங்கும் பாடறிந்து ஒழுகுதல் பாடலை எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க.** **2 x 3 = 6**

35. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக ?
36. அன்மொழித்தொகையைச் சான்றுடன் விளக்குக ?
37. இயல்புப்புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக ?

**பகுதி IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** **5 x 5 = 25**

38. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை ?
    ( அல்லது )
    உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக ?
39. விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

( அல்லது )

இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

40. மரபுத் தொடர்களைப் பொருளோடு பொருத்துக.

அ) ஆயிரங்காலத்துப் பயிர் - இயலாத செயல்

ஆ) கல்லில் நார் உரித்தல் - ஆராய்ந்து பாராமல்

இ) கம்பி நீட்டுதல் - இருப்பது போல் தோன்றும் ஆனால் இருக்காது

ஈ) கானல் நீர் - நீண்டகாலமாக இருப்பது

உ) கண்ணை மூடிக்கொண்டு - விரைந்து வெளியேறுதல்

41. வினைமுற்றுக்குரிய வேர்ச்சொல்லை எழுதுக.

அ) போனான் ஆ) வருக இ) கேட்டார் ஈ) சென்றனர் உ) பேசினாள்

42. வட்டத்தில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்திப் பத்து சொற்களை உருவாக்குக




## பகுதி V

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 3 X 8 = 24

43. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

( அல்லது )

தமிழக கைவினைக் கலைகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக?

44. 'வெட்டுக்கிளியும் சருகுமானும்" கதையைச் சுருக்கி எழுதுக.

( அல்லது )

"அறிவுசால் ஔவையார்" - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக.

45. கட்டுரை எழுதுக.

நான் விரும்பும் கவிஞர்.

( அல்லது )

' கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் ' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக ?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com